ஓலை 116| ஓசை 239| ஏப்ரல் 2025

# அகர முதல இலக்கியப் பேரவை



## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு

## பொருள்

தனக்கு உற்ற துன்பத்தை பொறுத்தலும், மற்ற உயிர்க்குத் துன்பம் செய்யாதிருத்தலும் ஆகிய அவ்வளவே தவத்திற்கு வடிவமாகும்

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய
9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

நிறுவனர்

**செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்**

ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

அலுவலக முகவரி


97, குஞ்சிதபாதம் நகர்,
டவுன்ஸ்டேஷன் தென்புறம்,
மயிலாடுதுறை-609001.


## அகர முதல இலக்கியப் பேரவை


Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

செய்தவம் மறந்தாற் கைத்தவ மாளும்!

## இன்னிசை பஃறொடை வெண்பா




வான்செய் தவமே மழைத்தவ மாளுமே;
ஊன்செய் தவமே உகந்ததோர் கைத்தவம்:
செங்கதிர் செய்தவம் சீர்கதிர் கைத்தவம்;
திங்களும் செய்தவம் சீரொளித்தண் கைத்தவம்;
செல்வரின் செய்தவம் சீரழிக்கும் பேர்தவம்;
இல்லாரின் செய்தவமே எல்லோர் தனையெரிக்கும்
தன்வயிறு ஏற்றிவைத்த சான்றோரின் கைத்தவம்;
இன்பந்தாம் நாட்டிலே ஏற்றிடும் சீர்தவமே!
அல்லும் பகலாய் அருமுழவர் சீர்தவமே
பல்லோர்க் குணவாய்ப் படைக்கும் பெருந்தவம்;
நல்லமனம் நல்லெண்ணம் நல்செய்கை நல்லுழைப்பே
நல்லதவம் செய்யவதை நாடு.




இலக்கணக் குறிப்பு:

வெண்பா வகைகளில் பஃறொடை வெண்பாவும் ஒன்று. ஒவ்வொரு சீருக்கும் காய் முன் நேர், மா முன் விளம், விளம் முன் மா என்று தளை பார்த்தல் வேண்டும். இயற்சீர் வெண்டளையும் வெண்சீர் வெண்டளையும் கலந்து வரும். இரண்டடிக்கோர் எதுகை பெற்று வரும். அடி தோறும் முதல் சீரிலும் மூன்றாம் சீரிலும் மோனை அமையும். நான்கடி முதல் பன்னிரண்டு அடிகள் வரை மட்டுமே எழுதுவதாகும். இது இன்னிசைப் பஃறொடை வெண்பா என்பதால் தனிச்சொல் வராது. பாட்டு முடியும் பன்னிரண்டாமடி மூன்று சீர்கள் வந்து ஈற்றுச் சீர் நாள், மலர்,காசு, பிறப்பு என்ற வாய்பாட்டில் முடியும் குற்றியலுகரம் நோக்க வேண்டும்.

நெருப்பலைப் பாவலர் இராம, இளங்கோவன்

## எண்சீர் விருத்தம்.

**காய் + காய் + காய் + விளம்**

செந்தமிழே முதன்மொழியாய்ச்
செப்பியதே இலக்கியம்.
செந்தமிழன் உணர்வுடனே
சேர்ந்திட்ட மொழியிதே.

எந்தையரோ உயிராக
ஏற்றனரே உடலுடன்
எந்நாளும் நாவினிலே
ஏற்றிவைத்தே மொழிந்தனர்.

செந்திறமாய் வாழவழி
செப்பமாகக் கூறுமே
செப்பமிட இலக்கணமும்
செம்மையாக இருக்குதே.

எந்தையரே முந்நாளில்
எமக்களித்த மொழியினையே
எம்மனாரும் பேசியதை
எம்முடையர் விரும்புவர்.



கவிஞர் செ. கலைவாணி, மேட்டூர் அணை

# மின்மினியாய் ஒழுகு

### பா வகை: நேரிசைக் கலிவெண்பா



துறைகள் எதிலும் துணிந்தே மிளிர்வாய்
கறைகளும் இன்றி -களிப்புடன் வாழ்வாய்
இறையை வணங்கி எதிலும் சிறப்பாய்
மறையில் இருந்திடா மாண்புமே-பெற்றிடு
மின்மினி போல மிளிர்ந்தே பறந்திடு
தன்னலம் இன்றி தகைமையும் - பெற்றிடு
என்றுமே வாழ்விலே ஏற்றமும் கொண்டிடு
இன்மை ஒழியவே என்றும்- உழைத்திடு
செய்கிற வேலை சிறப்பாய் முடிந்திடு
மெய்யும் உனையுமே மேன்மை படுத்துமே
பொய்யிலா வாழ்வுமே பொன்னாய் மிளிருமே
உய்க்கும் பெருமை உடன்வரும் நாளுமே
தொய்விலா மாண்பைத் தொடர்

கவிஞர் விஜயலக்ஷ்மி காளிதாசன், கோவை மாவட்டம்

# அன்பு

அன்பை அறமாக அவனியில் விதைப்போம்
தன்மை நிலையில் தரணியில் சேமிப்போம்
தூய்மை மிளிரும் தூய இதயமும்
தாய்மை சிறந்தே தானாய் எழுமே
பாங்காய் பணியும் பாமரன் நிலையும்
தூங்கா விழியும் தூரிகை ஆக்குமே
பறித்த பூவும் பதமாய் வெளிர்க்கும்
சிரித்த ஒளியில் செங்கதிர் தருமே
படர்ந்த உறவாய் பட்டொளி வீசியே
தொடர்ந்த துணையாய் தொடர்ந்து வருமே
விட்டால் போகாத விடுதலை உறவே
மட்டற்ற மகிழ்வை மண்ணில் தருமே
சுமையில் நிலைக்கும் சுகமிலா வாழ்வும்
ஊமை கனவின் ஊசலான நிலவே
குறைவிலா வாழ்வே குறையைப் போக்கும்
நிறையை நெடிந்து நிறைவிலா கொடுக்கும்
படுந்துயர் போக்கி பணிவாய் நடந்தே
நெடுந்தே வாழ்வை நெடுதே வளர்வோம்
வாழ்வது நமக்கு வானளாவிய ஒருமுறை
தாழ்வை போக்கி தரணியில் செழிப்போம்

கவிஞர் பி. அன்பழகன், கடலூர்

5. பதுமையார் இலம்பகம்.



சீவகனை வரவேற்று அரண்மனை கொண்டாட்டம்
அரசனோடு அமர்ந்து கண்டு களித்தான்
பரவசமாக விண்ணவர் மகளிர் நாட்டியம்
அரங்கில் சிலம்பு ஒலிக்க ஆடுகின்றாள்

வெண்ணைய் தீயிலே உற்றாற்போல் ஆடவர்
தன்னை மறந்து உருகி மெலிந்தனர்
மன்னன் தனபதி மகள் பதுமை
கண் இமைக்காமல் சீவகனை மொய்க்கிறாள்

பேசப்பட்டான் சீவகன் எல்லோராலும் புகழ்ந்து
பூசப்பட்டான் கூடியிருந்த நாட்டியக் கண்களால்
ஏசப்பட்டான் மகளிர் மன ஏக்கத்தால்
ஆசைப்பட்டாள் பதுமை தன் மணாளனாக

மணமலர் நிறைந்த பொழிலை அடைந்தாள்
குணமான பதுமை குரா மரத்தருகே நின்றாள்
தண்ணவன் ரசித்துக் கொண்டு இருந்தாள்
கனிவான பதுமையை பாம்பு தீண்டியது
(தண்ணவன் : குளிர்ந்த சந்திரன் )

அவள் முகத்தை மலரென நினைத்தது
முகத்தை விட்டு கையில் தீண்டியது
அகமும் புறமும் மயங்கி சரிந்தாள்
சக தோழிகள் மன்னனிடம் முறையிட்டனர்

மருத்துவர்கள் அவசர சிகிச்சை அளித்தனர்
மருந்துகள் பலவும் நஞ்சை முறிக்கவில்ல
திருத்தமான மந்திரங்கள் விஞ்சைகள் பலனில்லை
சருகான பதுமையைக் கண்டு கலங்கினான்
(விஞ்சை : மாயவித்தை)
நாடு முழுவதும் முரசு அறிவித்தான்
காடு மேடு அனைத்து ஊர்களுக்கும்
நாடி எவர் வேண்டுமானாலும் வரலாம்
பாடு பட்டு பதுமையைக் காப்பாற்ற

கூட்டில் இருந்து பறக்கும் பறவைகள்
நாட்டில் வல்லுனர்கள் விரைந்து வந்தனர்
சீவகன் கேட்டான் உடனே வந்தான்
ஆவலுடன் கற்ற மந்திரம் உதவியது

மன்னனும் மைந்தனும் சீவகனை வேண்டினர்
தன் மகளை மணமுடிக்கக் கூறினர்
"நின் விருப்பப்படி செய்க" என்றான் .
சொன்னபடி சீவகன் பதுமையை மணந்தான்.

பதுமையும் சீவகனும் காமன் பிடியில்
புது உலகத்தில் இன்புற்று இருந்தாள்
"தோளும் தாளும் பிணைந்துரு வொன்றெய்தி,
இங்ஙன மிரண்டு திங்க ளேகலு மேக"

இருளில் மறைந்து அவ்விடம் நீங்கினான்
"என் உயிர் போனது எங்கே?" தேடினாள்.
"திருமகனை ஒன்பதாந்திங்களிலே காண்பீர்"
அருமை பதுமையைப் பிரிந்து சென்றான் .
(ஆகச் செய்யுள் :1411.)
( பதுமையார் இலம்பகம் முற்றும் )

**தொடரும்...**

கவிஞர் ந. திருக்காமு

# அதை ஈடு செய்யும் பொருட்டில்



எதிர்படும்
புல்வெளிக்கப்பால்
ஏதோ இருப்பதாய்
நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்.
அது
ஏதுமற்ற வெற்றிடமென்று
உங்களுக்குத்
தெரியவரும் கணத்தில்.
என் மனக்குகைக்குள்
புழுவாய் நுழைகிறீர்கள்.
அங்கொரு மிருகம்
உங்களை ஆயுங்கொண்டு
வரவேற்பதைக் கண்டு
சற்றே மிரள்கிறீர்கள்.
அம்மிரட்சி உங்களுக்கு
வசமானப் பொழுதில்
ஆசுவாசமடைந்த நீங்கள்
அதை ஈடுசெய்யும் பொருட்டில்
ஆயுதம் தாங்கிய
கொடிய மனித மிருகமாய்
மாறியிருக்கிறீர்கள்.

கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# பிரபஞ்சத்தின் தேவதை அவள் அம்மா



உயிரணுவை கருவறையில்
கனிவுடன் ஏற்றவள்
நித்தமும் கவனமாய்
கருத்தாய் வளர்த்தவள்

மேடிட்ட வயிரை
கண்டு உள்ளம் மகிழ்ந்தவள்
ஐயிரண்டு மாதங்கள்
பாதுகாத்த தாயவள்

பிரசவ வலிதனை
மறந்தே நம்மை ஈன்றவள்
அமுதூட்டலில் அன்பின்
முகவரி தந்தவள்

அன்பால் அரவணைத்து
ஆதரவு நல்கியவள்
கருணை மனதோடு
காலமெல்லாம் உவகைப் பூத்தவள்

தவறைச் சுட்டிக் காட்டி
நல்வழிப் படுத்தியவள்
பாடசாலைக்கு அனுப்பி
அறிவூட்டிய அன்னையவள்

கொண்டவனை துதித்து
மதித்த மாதாயிவள்
ஒற்றுமை எண்ணத்தை
இதயத்தில் புகுத்தியவள்

நம்வாழ்வு சிறந்திடவே
அல்லும் பகலும் அயராது பாடுபட்டவள்
கண்துஞ்சாது கடமையாற்றி
நம்மை மேம்படுத்தியவள்

பிணி அணுகாது
உடல்நலத்தை பேணியவள்
நமக்கோர் துணையைத் தந்து
அகம் மகிழ்பவள்

நமது பிரபஞ்சத்தின் தேவதை
அவள் அம்மா
தாயை வணங்கிடுவோம்
தரணியில் தலை நிமிர்ந்திடுவோம்.

கவிஞர் பெ. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

# சான்றாண்மை

அதிகாரம் : 99

தகுமெனப்படுவன அறிந்து
சான்றாண்மை வழிநடப்போர்க்கு.
நற்குணங்கள் இயல்பாகவே
அமைந்திருக்கு மென்பர்நூலோர்.

சான்றோர்நலமென்பது அவரின்
நற்குணத்தா லுண்டானதே.
அஃதொழிந்த பிறநலன்கள்
எந்நலனிலும் வாராதாம்.

அன்புடன் நாணமும்
ஒப்புரவுக் கண்ணோட்டமுடன்
வாய்மையா மிம்மைந்தும்
சால்பின் தூண்களாம்.

தவமென்பது உயிர்கொல்லா
அறத்தைக் கொண்டதாம்.
சால்பென்பது பிறர்குற்றம்
பறைசாற்றா நற்பண்பாம்.

செயல்முடிப்போர் ஆற்றலென்பது
துணையோரை அன்போடணைத்தலும்.
பணிந்தசொல்லால் பகைஞரையும்
ஒழிக்கும் திறனுமாம்.

சால்புக்கு உரைகல்போல்
மதிப்புரைக்கும் கருவியாதெனில்.
தனக்கொவ்வா தாழ்ந்தோரிடத்தும்
தோல்வியை ஏற்கும்பண்பாம்.




தீங்கிழைத்தோர்க்கும் நற்செயல்களை
செய்யாவிடின் ஆங்கே.
சான்றோரின் சால்பினால்
என்ன பயனுமிலயாம்.

சால்பெனும் வலிமை
உறுதியோடிருந்தா லவர்க்கு.
வறுமைத் துன்பங்களும்
இழிநிலைத் தந்துவிடாதாம்.

சால்பெனுங் கடலுக்கு
கரையெனப்படும் பெரியோர்.
ஊழிகாலத்தின் வேறுபாட்டிலும்
தாம்மாறாது வாழ்வராம்.

பலநற்குணம் நிறைந்தோர்
பண்புகளில் குன்றிப்போயிடின்.
இப்பெருநிலமும் பாரம்தாங்காது
நிலைகுலைந்து போய்விடுமாம்.

கவிஞர் ஆன்றனி ஜமுனா, நாகர்கோவில்

# இலக்கணம்

எழுத்துக்களின் கோர்வையில்
வார்த்தைகளாக மாறிடினும்.

மொழிந்திட வந்தவை
பிழையின்றி பிறந்திடவே.

முறைப்படுத்திய வேலிகளின்
அசுரத்தன்மையே
இலக்கணமாக.




கவிஞர் இராஜகை நிலவன், மும்பை

# தோழமை

எழுத எண்ணினேன்
உன்னை எழுதும் எண்ணினேன்
என்ன எழுத?
எப்படி எழுத?
என்றெண்ணினேன்
இவ்வுலகை வர்ணிக்க வருபவள்
உமை வர்ணிக்க வர மறுக்கிறாள்
மௌனத்தில் அல்ல
மனதில் வெட்கத்தில்.
அவளான என் சிநேகிதி
தமிழும்!
இவ்வளவு எப்படி
வடிவமைப்பதென்று.
விழி பிறழ்ந்து வழி மறந்து
திகைத்து நிற்கின்றாள்.
தோழி இன்றிதான் தகுமோ இவளை.
தோழமை என்றிட்டால்
தகுமோ இவ்வுறவை! - என்று
தமிழும் இரசித்தாள்!
யானோ நேசித்து சுவாசித்தேன்
இப்படியான தோழமையை



கவிஞர் க. நிவேதா, பவித்திரம் (கரூர்)

# பெண்ணே

உந்தன் காதல் நினைவுகள்
மரணம் வரை எனக்குள்
உயிர்த்தெழும் காரணிகளாய்

காதல் மொழிகள் பேசும்
உனது உதடுகளில் நான்
அன்பின் சொற்களாய்

உனது அழைப்பில் எனது
பெயர் உலகின் புது
மொழிகளாய்

உனது கரங்களில் எனது
விரல்கள் நாள்தோறும்
சிறைப்பறவைகளாய்

இரவுகளில் உனது அழைப்புகள்
எனக்குள் தேசிய கீதத்தின்
சப்தங்களாய்

அன்பே காலத்தால் அழியாத
நம் காதல் மரணம் வரை
மகிழ்வின் முகங்களாய்



கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

# ஆயர்

நிறை மதி நாளில்
நீங்கா இன்னல் விலக
நெடுமாறன் அடி தொழும்
நன்னன் சேய்.

அகம் அறுக்கும் அவுணன்
ஆக்கம் அழிக்கும் ஆலி
அவிந்து அற்றுப் போக.
அழல் விசும்பு மருங்க
ஆற்றுப் படும் ஆயர்.



கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ் நாடு


# விழிகளில்லா வாசகன்



விழித்திருந்தும் கனவுகள் விதமாக வருகிறது
வியப்போடு எண்ணி வித்தையாக எழுதினேன்
விசித்திரமான உதயங்களோடு விண்ணகத்தையும் பார்த்தேன்
விழியோடு கற்பனையில் விண்ணையும் படைக்கிறான்
விலை மதிப்புள்ள வித்தகனுக்கு விந்தையாகிறான்
கனவுலகில் எண்ணங்கள் கனவாகி போனது
கற்பனை உலகில் கசிந்துருகி வாடுகிறான்
கண்ணுக்கு எட்டா கலையுலகம் நாடுகிறது
கரும்பாய் இனித்து கற்கண்டாய் நிற்கிறான்
கசப்பும் அவனுக்கு கனியாய் மலர்ந்தது
வாசமில்லாமல் மலர்ந்து வாசகனாகி படைக்கிறான்
வாடிய நெஞ்சமும் வாழ்ந்து காட்டுகிறது
வாழ்க்கை என்னுள் வாழ்வாதாரத்தை நினைவூட்டியது
வாத்தியங்கள் முழங்க வாழ்த்துச் சொல்லியது
வாயாற உண்பதில் வாணியும் அழைத்தாள்
வாசகன் உள்ளத்தில் வாக்கியங்கள் உருவாக்க
அவனது எழுத்தை அவனது அங்கீகாரம்.

கவிஞர் ம. செ. அ. பாமிலா பேகம்

# கண்ணருள்




கவிஞர் மரு ஜலீலா முஸம்மில், ஏறாவூர் (இலங்கை)

# உடன்பிறவா உதிரமே!

தாயவள் கருவிலே சுமந்திட
தந்தையவன் மனதிலே சுமந்திட
ஆசான் பள்ளியிலே சுமந்திட
தாய்க்குப்பின் தாரம் தாயாவாள்!
தந்தைக்குப்பின் யார் யாரோ?

தந்தையவன் இறந்திட
தாயவளும் சங்கமித்திட
ஊர் பலதும்பேசிட
வம்சமது தலைமுழுகிட
எனை ஏற்றவன் நீயல்லவா!

நிலவின் ஒளியாய் வந்தாய்
நிலவுக்குள் நிலவனானாய்!
உன் வதனம்பார்த்திட துடித்தது என்விழி!
உன் கரம்பற்றிட துடித்தது என்கரம்!
உன்னோடு பேசிட துடித்தது என் நா!
உன் குரலதை கேட்டிட துடித்தது என்செவி!
உன் நினைவுகளைப் புரட்டிட துடித்தது என்மனம்!
உன்னோடு வாழ்ந்திடத்துடித்தது என்னுயிர்!



சொற்பகால நொடிக்குள்
எங்கிருந்து வந்தாய் என்று கேட்டதே! பார்!
ஒருநொடிக்குள் உயிரான கதைசொல் என்றது வீடு!
விடுவிடுவெனத்துடித்தது இதயம்!
அதனை அணைத்திடத்துடித்தது உன்னிதயம்!

காரிருள் தனைக்களைந்து ஒளியதை ஏற்றிட
உன்னைத்தியாகம் செய்தாய்!
கண்ணுக்குள் கண்வைத்து எனைநீ தாங்கினாய்!
மறுபிறப்பொன்று உண்டெனில் உன்துணையாய்,
மகனாய் வாழ்ந்திடும் பாக்கியமதை நீ கொடாயோ இறைவா!

கவிஞர் இ. தேவர்மன், முல்லைத்தீவு (இலங்கை)



பெண்ணே !
தடை கொண்டுன்னை
கிடையாக்க நினைத்தால்
மடைதிறந்த வெள்ளமென
மறுகரை சேர்ந்திடு.

இதுதான் விதியென்று
இயக்கத்தை நிறுத்திட்டால்
இறந்துவிட்டாயென்று
இறக்கிடுவர் மண்ணுக்குள்.

வீழ்ந்தாலும் மண்ணில்
விதையென வீழ்
விருட்சமாய் எழுவதற்கே

கவிஞர் ஸ்ரீவள்ளி, கோவை

# விழியிழந்தவன் கை விளக்கு

அது ஆகப் பெருங் காடு
ஆகிருதி தோற்றங்கொண்ட ஆனை
தோற்றங்கண்டு தெறித்தோடும் சேனை
துதிக்கை தூக்கி பிளிறினால் காடதிரும்


நிழல் தெரிந்தாலே நெடுந்தூரம் ஓடும்
நிஜம் அறியா அப்பிராணிகள்
பயத்தில் பதுங்கி மறைந்து உறையும்
ஒன்றாக சேர்ந்து ஒழித்து விட வேண்டும்

அரக்க தோற்றம்! அன்பின் ஊற்று
கூடிகுலவ கோடி ஆசை
அது சரி! விரும்பி வாங்கிய தோற்றமா?
விதிப்படி அமைந்தது! சதி செய்கிறது

புறத்தோற்றத்தில் மயங்குது உலகு
அகத்தோற்றம் அறியாதது பிசகு
ஆனையுடன் கூடிப் பழக ஆளில்லை
ஆசையுடன் வார்த்தை பகிர உறவில்லை

அன்று பெய்த பேய் மழையில் காடு வெள்ளக் காடானது
இங்குமங்கும் ஓடின உயிர் பிழைக்க
பல வெள்ளத்தில் மடிந்தன
சில மரங்களில் ஏறி உயிர் பிழைத்தன

விடிந்தது! வெள்ளம் வடியவில்லை
உண்மை வெளிச்சத்துக்கு வந்தது
ஆனையார் மீது நான்கைந்து குரங்கு குட்டிகள்
துதிக்கையை பாலமாக்கி பல உயிர்களை கரை சேர்த்தது



இதுகாறும் உன் உள்ளம் புரியாமல் போயிற்றே
மனதும் பாறை என்றே எண்ணியது பிசகு
துதிக்கை அல்ல! அது நம்பிக்கை
கால்கள் எமை தாங்கிப் பிடித்த தூண்கள் அல்லவா?

விழியிழந்தவன் கை விளக்கானதே
உருவு கண்டு ஏமாந்ததே கண்கள்
உண்மை உணரா பதர்கள்
உள்ளம் புரியா சிறார்கள்

கவிஞர் முனைவர் கதிர்வேல் தனியரசு, திருச்சி

# செல்லப் பெயர்த்தியின் சினம்

சுருசுருவென பொங்கும் பால் போல;
சரி சரவென இறங்கும் சாரல் போல;
பளபளவென கருமேகத்திடை மின்னலென;
மளமளவென இறங்கும் மலையருவியென்ன;
வீசு காற்றின் மேற்பட்ட மஞ்சுவென;
ஓடு நீரின் மேலிட்ட வண்ணக் கோலமென;
உயர் வானிடை வெய்யவனிட்ட வில்லென;
அந்தியில் துவங்கு பொன் மஞ்சள் அழகென;
தோன்றலிலே துளங்கி,
மயங்கும் உன் சினம்;
'தண்' என் நீங்கும்.
அதனால்,என்றும்
அது துலங்கட்டும்;
என் மலர்தல் பொருட்டு மட்டும்.



கவிஞர் சசிகலா விஸ்வநாதன்

# ரமழானின் பிரிவு



பாவங்களைச் சுட்டெரிக்கும் பாங்கான ரமழான்
பிரியாவிடை பெற்றுப் பறந்தே சென்றது
கண்கள் குளமாகி காட்சிகளை மறைத்திட
கருத்தினில் நிறைந்திட்ட உம்மைப் பிரிந்து
துயரினில் இங்கு துவண்டு நிற்கிறோம்

மூபத்து நாட்கள் முழுநிலவாய் குடியிருந்தாய்
ஒவ்வொரு பத்தையும் உயிர்ப்பிக்க உதவினாய்
அன்பாளன் அருளாளன் மாலிகி யவ்மித்தீனிடம்
அனைத்தையும் முன்வைத்து உளமுருகச் செய்தாய்

குர்ஆனோடான சங்கமிப்புகளில்
சிந்தனைகள் தெளிந்து
சிரத்தையோடு அதிகம் சிந்திக்கத் தூண்டின

நரக விடுதலையை வேண்டிக் கெஞ்சி அழுததில்
நாடி நரம்புகளும் வீங்கிப் புடைத்து விட்டன
ஸகாத் ஸதகாக்களை உரியவர்களிடம் சேர்ப்பிப்பதில்
இரவு பகல்களும் இனிதாகவே கழிந்தன

நடுநிசிப் பொழுதுகள் நல்லமல்களால் நனைந்தே
வரண்ட நிலம் செழித்தது போல் உள்ளங்கள் மலர்ந்தன
பாவ மன்னிப்பையும் தேவைகளையும் வேண்டி
ஏந்திய கரங்கள் ஏக்கத்துடன் நிற்கின்றன

அல்லாஹ்வின் திருப்பொருத்தம் கிடைத்திட்ட கூட்டத்தில்
எமக்கும் இடம் கிடைத்திருக்க வேண்டும்
பாபுர் ரய்யான் வழியாக

ஜென்னதுல் பிர்தவ்ஸை அடைந்திட
ஏகனவன் அருள் புரிந்திட வேண்டும்
கருணையுள்ள இறைவா! எமது நோன்புகளை ஏற்றிடு!
நீ வாக்களித்த நற்கூலிகளைப் பிரியத்துடன் நல்கிடு

கவிஞர் மாஹிரா ஹமீட் அஸ்ஹார், இலங்கை

# அற்பத்தனமான காதல்

சப்தமற்ற என் ஜீவ நதியில்
யார் அவளை
கால் கழுவச் சொன்னது?

அவள் வேடிக்கை
பேச்சுக்களுக்கு
பூங்கா பொறுத்திருக்கலாம்
என் ஆரோக்கிய நதி
அவள் கல்லெறிந்து
ஆனந்தம் காண அல்ல.

அவள் நலவிசாரிப்புகளில்
எனது நலமில்லை
மழை இல்லையென்பதால்
உயிர்கள் வாழாது போனதுண்டோ?

பூக்களுக்கு மொழிப்பயிற்சி
தருகையில் யாரவளை
மலர்களுக்கு அறுவை சிகிச்சை
செய்யச் சொன்னது?

அவள் தொண்டு செய்வது
நான் கண்டுகொள்ளவே
என்றறிந்தபின்
தெரிந்து கொண்டேன்
அவளின் அற்பத்தனமான
காதலை.




கவிஞர் கோ. டோன்குமார்

# தேவைக்குத் தேடப்படுபவன் நான்

எப்போதும் நினைக்கிறார்களா
எப்போதுதாவது நினைக்கிறார்களா
தெரியவில்லை

தேவை என்றவுடன்
என் நினைவு வருவதால்
மகிழ்வதா
மற்றொருமுறை யோசிப்பதா
தெரியவில்லை

எப்போதும் தேடுவார்களா
தெரியவில்லை
இப்போது தேடுகிறார்கள்
இப்போதைக்குத் தேவைப்படுகிறேன்

தேடப்படுபவராக இருப்பதில்
உணர்கிறேன் என்னை
வலிய சென்று மாட்டிக்கொள்கிறேன்
தேவைகளைப் பூர்த்திசெய்துவிட.



கவிஞர் முனைவர். இரா. இராஜமோகன், அயன் குறிஞ்சிப்பாடி

# கனம்

வீடு மாற்றத்தின் போதெல்லாம்
மனம்
கனத்துக் கொண்டேயிருக்கிறது
என் உணவுக்காய்
அணில்களும் பறவைகளும்
மீண்டும் வரும் வரை



கவிஞர் அன்னலெட்சுமி சரவணன், ஈரோடு

# திருமண வாழ்வு

பூவரும்பாய் அரும்பிய காதலை
பூவிதழாய் அன்பை சொல்லி
பூங்கொத்தாய் காதலித்த நாட்களுமே
பூமணமாய் வீசியதே

பூந்தோரண பந்தலிலே
பூமேடையமைத்து
பூவதையும் சூடியே
பூமாலையும் மாற்றியே

பூவான பொட்டும் வைத்து
பூவையவளை பெண்சாதியாய்
பூக்கரங்களால் ஆக்கிட்டு
பூக்குவியலான வாழ்நாளையும்

பூ வென்ற வார்த்தைகளால்
பூஞ்சருகாய் ஆக்கியதேன்
பூமலர்ந்து காயாகி
பூங்கனியாக விடாமலே

பூடகமாய் இருப்பதேன்
பூந்தளிரான மனைவி எனையுமே
பூசலோடு நோக்குவதேனோ?
பூமியில் வாழும் நாள்

பூராவுமே புருஷனாக நீ மட்டுமே
பூர்த்தியென்ற நினைவோடு
பூஜை செய்து வீழ்ந்திடுவேனே
பூங்காவன திருமண வாழ்விலே!



கவிஞர் நீலாசுபாஷ், ஆக்கூர்

# ஓவியமும் காவியமும்



மழலையின் முகமோ தாய்க்கு ஓவியம்!
தாயின் அன்போ சேய்க்கு காவியம்!

எழுத்தினால் வரைந்திட்ட கவியோ ஓவியமாம்!
விரல்களால் பேசிடும் வார்த்தையோ காவியமாம்!

தஞ்சை பெரிய கோவிலோ ஓவியமாம்!
சிதம்பர ரகசியமோ பெரும் காவியமாம்!

செடிதனில் காணும் மலரோ ஓவியமாம்!
மங்கையவள் சூடிடும் மலரோ காவியமாம்!

திரண்டு நின்றிடும் மேகமோ ஓவியமாய்!
பஞ்சம் தீர்த்திடும் மழையோ காவியமாய்!

மனிதனின் பிறப்போ பிரபஞ்சத்தின் ஓவியமாம்!
மனிதனின் வாழ்வோ மிகப்பெரும் காவியமாம்!

இயற்கை அன்னையின் அழகோ ஓவியமாய்!
இயற்கை அளித்திட்ட கொடையோ காவியமாய்!

கனவுகளில் வாழ நினைப்பதோ ஓவியமாம்!
நனவுகளில் வாழ்ந்து காட்டுவதே காவியமாம்!

கவிஞர் இரா. கோமதி, பொள்ளாச்சி

# மீண்டு(ம்) வருவேன்

பீனிக்ஸ் பறவை போலே
எழுவேனே நானுமே!
வண்டியும் ஒரு நாள் ஓடத்திலே,
ஓடமும் ஒரு நாள் வண்டியிலே.
எங்கெங்கு காணினும் சக்தியே!
ஆத்திகனுக்கு வேண்டும் முக்தியே!
குழந்தைக்கு தேவை அமுதே
எனக்கும் தேவை அகர முதலே!
எனக்குள் நிறைய மாற்றங்கள்
இனி எப்போதுமே வேண்டாமே ஏமாற்றங்கள்.
ஓடம் நதியினிலே நான் ஓடத்திலே

கட்டுச் சோறு எத்தனை நாளைக்கு?
பாலையும் சோலையாகும் ஒருநாள்
மீன் குஞ்சு ஆகிய நான்
நீந்தவும் கற்க வேண்டுகிறேன்!
தரையிலே விழுந்த மீனாக
துடித்துதான் போனேனே!
எழுத்தறிவித்தவன் இறைவனே ஆவார்.
ஆயினும் என்னை கவிஞர் ஆக்கியது
அகர முதல பேரவையே!
வெள்ளைப் புறாவை
பறக்கத்தான் விட்டிருக்கிறேன்.
இனி ஜெயமே ஜெயம் தானே!



கவிஞர் ஆ. கிருஷ்ணவேணி, ஊத்தங்கரை

# தயக்கம்



நீர் தொட்டும் பேசும்
குளிர் கண்ட பயத்திலா.

தொட்டும் போனால்
கரையேறத் தோணாத மனதிலா.

பேசும் ஆவல் நீண்டு பொல்லாத
ஆசை தரும் சந்தேக வேள்வியிலா.

ஏதோவொரு தயக்கத்துடன்
கரை தீண்டியும் கடல் தீண்டாமல்!

கவிஞர் ஜெயப்பிரபா

# தாய்மை குணம்



அன்பு குணம் கருணை மனம் மனிதர்களுக்கு வேண்டும்
பாசம் பண்பு போற்றும் குணம் அரவணைக்கும்
*தாய்மை குணம்* அமைந்திட வேண்டும்.

விதைத்தது தான் முளைக்கும் என்ற
எண்ணம் என்றும் வேண்டும்
வானுயர்ந்து விருட்சமாய் கிளை பரப்பி
நிழல் தரும் மரத்தின் செயல் வேண்டும்.

வாழும் காலம் உயிர்களுக்கு அன்பு காட்ட வேண்டும்
அன்பு என்ற ஒன்றுதான் அகிலம் முழுக்க வேண்டும்.

காசு பணம் செல்வம் என வாழும் நிலை தவிர்த்து
வையகம் போற்றும் வள்ளல் என நிறைந்த அன்பு வேண்டும்.

பொருள் சேர்த்து வாழ்வதல்ல உயர்வான வாழ்வு
பிறர் துயர் களைய துணை நின்று தோள் கொடுப்பதே வாழ்வு.

அன்பு என்ற உயர்ந்த குணம் இதயத்தில் இருந்திட்டால்
சக உயிரும் சமமென போற்றும் குணம் வந்திடுமே.

அன்பு என்ற உயர்ந்த குணம் அனைவருமே பெற்றிட்டால்
அகிலமே அன்பால் பூத்துக் குலுங்கும் இன்பமாய்.

கவிஞர் ஜேப்பி@பன்னீர்செல்வம், சேத்தியாத்தோப்பு

# குறுங்கவிதை



துன்பமே
உன்னை
ஓட ஓட விரட்டவே
ஆசை
காரணம்
நான் புத்தன் இல்லை.

கவிஞர் ஆதன் ஆரா, அருப்புக்கோட்டை

# நெஞ்சில் நிறை நேசம் நீ

உனக்கென்று என்றதும் என் உயிர் வடிவதும்
எனக்கென்று என்றதும் உன் உயிர் வடிவதும்
இதுவே ஆழப் பிரியத்தின் உண்மையான அடையாளம்!

வலியால் முழங்க நீ தூங்க முடியாமல் கிடந்தால்
உன்னை அந்த நிலையில் காண முடியாத நான்
தூக்கம் மறந்து இறைவனிடம் மண்டிக் கொண்டிருப்பேன்
உன் நலம் வேண்டியே!

என் விழிப்பில் நீ இருந்ததால்
என் பிரார்த்தனைகள் தொடரும்
உன் விழிப்பில் வலி இருந்ததால்
நீயும் துயரின் மடியில் என்னை உணர்வாயே!
இது நேசத்தின் பிரியம் அல்லவா?

எங்கே சென்றாலும்
"போய் வருகிறேன்" என நீ சொன்னதுமே
உன் வருகை நலமாய் அமைய
என் பிரார்த்தனையும் தொடரும்.

சிறு பிரிவுக்கே அகவையாக ஏங்க வைப்பதே
இந்த ஆழ நேசத்தின் உண்மையான அடையாளம்!

நீ தொலைதூரம் சென்றாலும்
உன்னை பற்றிய நினைவுகள் எனக்குள் தொலைவதில்லை
உன் நினைவில் நான் பயணிக்க
சலனமில்லாமல் காலம் முழுதும்.



கவிஞர் சஹ்னாஸ் பேகம், முதலைப்பாளி, புத்தளம்

# நீ படுத்தும் பாடு



இதை முடிக்கவில்லை
இதுதவறு
இதை ஆரம்பிக்கவில்லை
இதை யோசிக்கவில்லை
இந்த முடிவு தவறு
இந்த முடிவு எடுக்கவில்லை
இது கிடைக்கவில்லை
இது தேவையே இல்லாதது
கிடைத்திருக்கிறது
நாளைக்கான
திட்டமிடல் என்னவாயிற்று

என உறக்கத்துக்கு முன்னானபொழுதுகளில்
தொணதொணக்கும்
மனதின் கேள்விக்கு

எல்லாவற்றையும் செய்ய
நேரம்என்ற ஒன்று உள்ளது
நீ சொல்லா
பிறரின் முன்னுரிமை
பணிகள் செய்யவேண்டியுள்ளது

நீ அறியா
எதிர்பாரா தடைகள் உள்ளது
நீ நினைக்கா
புதியவை அறியவேண்டியுள்ளது

நீ கண்டிரா
அனுபவங்கள்
பெற வேண்டியுள்ளது

இறுதியாய்
எனக்கும் புத்துணர்வு பெற
ஒய்வு தேவை

புத்தியின் பதிலாய்
கூடுதல் பதிலுரையாய்
உனக்கு விரும்பமட்டுமே தெரியும்
செயலாற்றுபவனாய் நான்

கவிஞர் சுந்தரராஜன், மானாமதுரை



உயிர்ச்சுரங்கம் நீ
உன்னிடம் பெறுகிறேன்
தினமொரு புதுமை
*

எந்த நேரம் நீ
நினைக்க மறப்பாய்
நான் மூச்சுவிட
*

வேலை தேடினேன்
உன்னைக் கண்டேன்
வாழ்க்கையைத் தேடுகிறேன்
*

உன்னிடம் தொலைத்ததை
கண்டுபிடிக்கக் கேட்கிறேன்
அனுமதி கொடு
*

வரையறை வேண்டாம்
வாழ்க்கை தீரும் முன்
வந்து போ கனவுகளில்
*

உன்னைச் சந்தித்தபின்
மரணப் பட்டியலில்
என் பெயர்
*

மூச்சுமுட்ட முத்தமிடுகிறேன்
மறுக்காத புன்னகையில் நீ
புகைப்படத்திலும்
*

கவிஞர் இளையவன் சிவா

என் தந்தை
கம்யூனிஸ்ட் கிங்
இதுவரை தனக்காய் வாழ்ந்ததில்லை
***

குயிலின் குரல் மயிலுக்கு இருந்தால்
அதை கையால் பிடிக்க முடியாது
இப்போதும் அப்படிதான்
***

கம்யூனிஸ்ட் அனைவரும்
உடற்பயிற்சி செய்யுங்கள்
இன்னும் சிறிது காலம்
பிறருக்காக வாழ அது வாய்ப்பளிக்கும்
***

அதே இடம் அதே ஆள் அதே நேரம் அதே வயது
இனி வர வாய்ப்பில்லை
இன்புறு இயன்றவரை
***

போன ஜென்மத்தில் இந்த புத்தகம் படித்தேன் போல
இதே பக்கம் மடங்கி இருக்கிறது இல்லை இல்லை
நேற்றைக்கு படித்து தூங்கி எழுந்தேன்
***



பூவரச இலையில் பீப்பீ செய்வது முதல்
கீபோர்ட் புல்லாங்குழல் வரை
இசை பரிணாமம்
***

எல்லா தொழிலிலும் திருட்டு உண்டு
திருடனின் தொழில் அதில்
வெளிப்படையானது
***

மலை உச்சிக்கு செல்லுங்கள்
அங்கிருந்து கீழே பாருங்கள்
மனிதன் புலப்படுவான்
பணம் ?
***

சாலை முனையில் இருவர் நின்றுகொண்டு
மாறி மாறி நீங்கள் செல்லுங்கள் என்கின்றனர்
மனிதம்
***

கருவறை
வகுப்பறை
கல்லறை
இன்றியமையாத அறைகள்
***

அனைவரின் சுயநலத்தையும்
மனதில் கொள்ளுங்கள்
கம்யூனிசம் பிறக்கும்

கவிஞர் சிரஞ்சீவி இராஜமோகன், கும்பகோணம்

# சிந்தனைச் சிறை



கடந்த நாட்களால்
கசந்து போகும்
நினைவுகள் என்றும்
சிந்தனைச் சிறைதான்

காலத்தின் கீறல்கள்
ரணங்களாய்ப் பதியும்
அமாவாசை நாட்களுக்குள்
கண்களும் குருடுதான்

கால்களுக்குக் கட்டுப்போட்டு
கவலைகளால் முடக்கும்
சூனிய நாட்கள்
சிலந்திவலைப் பூச்சிதான்

ஆகாய வெளியில்
உலாவிய சிந்தனைச்
சிறகுகளுக்கு ஒடிந்துபோன
நிலைமாறுகை இல்லாத
முன்னேறுகை கம்பிகளுக்குள்
அகப்பட்ட ஆளுகை
மரணத்தின் நினைவுகளைத் தவிர
வேறு எதைத்தான் கொணர முடியும்?

கவிஞர் சேஹு மொஹம்மது பெனாஸிரா

# வானம் வசப்படுமே!

சிறகை விரித்து பறக்கத் துணிந்த
பறவைக்கு எளிதில் வானம் வசப்படும்!
வெற்றியை நோக்கிப் பயணிக்கத் துணிந்தால்
வீழ்வதைக் கண்டு பயந்திடல் ஆகாதே!
தாழ்வு மனப்பான்மையினை தகர்த்தெறிந்து முன்னேறி
வாழ்வதில்தான் உயர்வுக்கான பாதை புலப்படுமே!
வெற்றியெனும் சிகரத்தில் ஏறிட முனைவோர்க்கு
சற்றே முயற்சித்தால் வானம் வசப்படுமே!
ஏற்றிய தீபம் எத்தகைய மழைவரினும்
சற்றும் குன்றாமல் குன்றின்மேல் எரிகிறதே!
காற்றைக் கண்டு பயமொன்றும் அதற்கில்லை!
ஆர்வமெனும் நெய்யூற்றி, சிந்தையைத் திரியாக்கி,
நம்பிக்கை விளக்கேற்ற அச்சமெனும் இருள்நீங்கும்!
இயற்கையின் கூறுகள் மனிதர்க்கு வசமாகும்!
முயற்சியின் பயனால் உச்சத்தை அடைவதை
இயம்பிடவே இத்தலைப்பு! நம்பிக்கையின் விதைப்பு!
பயனற்ற செயலாற்றி காலத்தி வீணாக்கி
வாழ்கின்ற மனிதர்க்கு வசமாகாது வானமென்றும்!
காற்றுள்ள போதே தூற்றிக்கொள் என்பார்கள்!
வாய்ப்புகளைத் தவறாமல் பயன்படுத்தி முயன்றாலே
வசப்படுமே வானம்! வெற்றிச் சிறகடித்து
இசையுடன் வாழ்ந்திடலாம் இப்புவியில் எந்நாளும்!

கவிஞர் ஈ. சீ. சேஷாத்ரீ

# காலத்தால் மாறாத நேசம்



உன்தோளில் சாயும் போதெல்லாம்
தோகைமயில் நானாகிறேன்
பிரிவின் வலிகளை
நினைவுகளின் தீர்க்கிறேன்

காணும் தருணங்களில்
அன்பில் கரைகிறேன்
நேசத்தின் வரிகளை
பாசத்தில் வார்க்கிறேன்

அத்தனையும் மொத்தமாய்
உன்னருகில் உணர்கிறேன்
ஆயிரம்தான் கவலைகள்
கனப்பொழுதில மறக்கிறேன்

சந்திக்கும்போதெல்லாம் நனவா
கனவாஎன வியக்கிறேன்
அத்தனையும் கொட்டியழுது
தீர்த்திடத்தான் விழைகிறேன்

உயிரான உறவாகி
உனதுள்ளத்தில் புதைகிறேன்
பிரியாத வரம்வேண்டி
இறைவனிடம் யாசிக்கிறேன்

காலங்களால் மாறிடாத
மனதை வேண்டுகிறேன்
கடைசிவரை உன்னோடு
வாழ்ந்திடத்தான் வாழ்கிறேன்

உன்தோளில் சாயும் போதெல்லாம்
தோகைமயில் நானாகிறேன்

கவிஞர் செண்பகச் சோலையாள் ஆய்ஷா, கம்மளை

# அன்னையே தெய்வம்!



ஆடித் திங்கள்
சில்லென்று தீண்டும்
வாடைக்காற்று!

ஊசி முனைகளாய் குத்தி
வெடித்துச் சிதறும்
வேதனையின் உச்சம்!

கருக்களில் கனன்று
விட்டும் தொட்டும்
சடுதியில் தொடங்கி
பட்டுப் படர்ந்து
நிலையின்றி உறக்கம் பெயர்க்கும்
வலியின் தாண்டவம்!

நடந்தே கடந்த
நண்பகல் பொழுது!
இருப்பின் தவிப்பை
சுருக்கென கிள்ளியும்
சொல்லியும் கடத்த முயன்று
தோற்றத் தருணம்!

அந்தி சாயும் வேளை வந்தது வலி!
பிறந்தது புது மொழி!
அன்னை இட்ட சத்தம்
அகிலம் பெயர்த்தது!
விழி மலர்ந்த காவியம்
குழந்தை வடிவில்
ஒட்டிக்கொண்ட குதூகலத்தின்
ஒய்யாரச் சிரிப்பில்
தன்னை மறந்து சிரிக்கும்
ஏழைத் தாயின் முன்னால்
மா மழையாய்
கரம் கொட்டிச் சிரித்தது வானம்!

சுழன்று திரும்பி
சோதனை கடந்த
வேதனைச் சிரிப்பை
வேடிக்கையாகத் தந்தாள்
அன்னை தெய்வம்!

இன்னும் பிறக்காத விடியலும்
தென்றலைத் தூது விட்டு
தொட்டுத் தாலாட்டுகிறது
மழலைச் சிரிப்பில்!

வானம்
பூமி
காற்று
வரிசையில் தாய்!

கவிஞர் யாழிசைசெல்வா

## அத்தியாயம் 5

## நான் நல்லவனில்லையா? (நவீனம்)



"இவ்வளவு நாளும் நல்லப் பையனாகத் தானிருந்தீர்கள். இப்பொழுதுதான் ரொம்ப மோசமாகத் தெரிகிறீர்கள்."

"அப்படியென்றால் என்னிடம் பணமில்லை என்றால்... நான் எதுவும் வேண்டாம் என்று என் தந்தையின் வீட்டை விட்டு வெளியே வந்தால் இந்த தமிழரசை நீ விரும்பப் போவதில்லையா நீலாம்பரி."

"அது... அப்படியில்லை அரசு." இழுத்தாள் நீலாம்பரி.

"நேரடியாகக் கேட்கிறேன், இனி நான் என் தந்தையின் வீட்டிற்கோ அல்லது அவருடைய பணத்திற்கோ பாத்தியதை ஆகப்போவதில்லை. அப்படியிருக்கும் தருணத்தில் இந்த அரசை நீ விரும்புகிறாயா? ஏற்றுக்கொள்வயா என்பதுதான் என் கேள்வி?"

"ஏன் இப்படி விதண்டாவாதமாகப் பேசுகிறீர்கள். ஒழுங்காக வீட்டிற்குப் போங்கள். அப்புறம் பேசிக்கொள்ளலாம்."

"இல்லை நீலாம்பரி. உன் மனதில் தடுமாற்றம் தெரிகிறது. தெளிவாகச் சொல்கிறேன் நான் இந்த நிமிடத்திலிருந்து ஒரு பைசாக கூட இல்லாத வெறும் வெற்றுப்பயல் தமிழரசு. இந்த நிலையில் என்னை உன்னால் திருமணம் செய்துகொள்ள முடியுமா?"

அவனை ஏறெடுத்து நோக்கிய நீலாம்பரி "பணம் இல்லாதவன் எப்படி என்பது எனக்கு தெரியும் அரசு. அந்தக் கஷ்டங்களை நான் அனுபவிக்கவில்லை எனினும் கண்ணால் பார்த்தவள். ஒன்று தெரியுமா? இல்லாதவனை இல்லாளும் வேண்டாம் என்றாள்."

"என்னதான் சொல்கிறாய்?" கோபத்தில் எழும்பினான் தமிழரசு.
"யாரையாவது ஒரு நல்லவனை பார்த்து திருமணம் செய்து கொள்ள வேண்டியதுதான்." என்றாள் நீலாம்பரி எங்கேயோ பார்த்துகொண்டு.

"சே"! என்று கத்திவிட்டு எரிச்சலுடன் கிளம்பினான் அரசு.

## அத்தியாயம் 5

## நான் நல்லவனில்லையா? (நவீனம்)

தமிழரசு தன் கால் போனபோக்கில் நடந்துகொண்டிருந்தான். பின்னாலே சப்தம் எழுப்பிய ஆட்டோக்காரன் அவனைத் தாண்டிப் போகுபோது "துஜா..." மராத்தியில் திட்டி விட்டுப் போனான்.

கொஞ்ச நேரம் நடந்ததும் கால் வலித்தது. வசாய் ரோடு ஸ்டேஷன் வந்ததும் டிக்கெட் வாங்கக் கூட பையில் பணமில்லை என்று உணர்ந்த போது "ஆவ் சாப் கிதர் ஜாரஹாஹை?" என்றான் டீக்கடை பையாக்காரன்.

"சாரி பாய் சாப். பணமில்லை" என்றான் தமிழரசு.

"உன்னிடம் யார் பணம் கேட்டார்கள். டீ குடி" என்று கட்டிங் சாய் கொடுத்தார். சூடாக வாங்கிக் குடித்து விட்டு டிக்கெட் எடுக்காமல் சி.எஸ்.டி. ரயிலில் ஏறி காந்திவிலியில் இறங்கினான்.

சார்க்கோப் இண்டஸ்டிரியல் ஏரியாவில் சுந்தரின் தொழிற்சாலை இருந்தது. பஸ்ஸுக்கோ ஆட்டாவிற்கோ பணமில்லை. நடந்து போவதென்றால் அரை மணி நேரமாகும். பல்லைக் கடித்துக் கொண்டு வேகமாக சார்க்கோப்பிற்கு நடந்தான் தமிழரசு.

வழியிலே இரண்டு மூன்றுபேர் காரிலேயிருந்து "ஹாய் அரசு..." என்று கை காட்டிவிட்டுப் போனார்கள்.

அவன் காந்திவிலி இரயிவே ஸ்டேஷனில் இருந்து சுந்தரின் கம்பெனிக்கு நடந்து வர அரைமணி நேரத்திற்கு மேலாகி விட்டது.

'சுந்தர் இண்டஸ்டிரீஸ்' என்ற பெரிய நுழைவயிலில் அமர்ந்திருந்த செக்யூரிட்டி பெரிதாக வணக்கம் போட்டான் சிரித்துகொண்டு 'சுந்தர் எம்.டி.' என்று சிவப்பு எழுத்துகளால் எழுதியிருந்த கண்ணாடிக் கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே போனான் சுந்தர்.

பி.ஏ.விடம் ஏதோ லட்டர் டிக்டேட் பண்ணிக் கொண்டிருந்த சுந்தர் "வா தமிழரசு. என்ன ரொம்ப டயர்டாக இருக்கிறாய்... " என்றவன் தன் பெர்சனல் செக்ரட்டரி கீதாவைப் பார்த்து........"அலுவலகப் பையனிடம் ஸ்ராங்கா ரெண்டு கப் சாயா கொண்டுவரச் சொல்லு" என்றான்.

அத்தியாயம் 5

நான் நல்லவனில்லையா?
(நவீனம்)

"என்னடா ஒரு மாதிரி இருக்கிறாய்? என்னையும் ஒரு மாதிரி பார்க்கிறாய்? " சிரித்தான் களைப்பாக இருந்த தமிழரசனைப் பார்த்து.

தனக்குள்ளே சிரித்துக்கொண்ட தமிழரசு, புன்னகைத்து கொண்டே "இது எல்லாமே உங்க அப்பாவினுடைய வியாபாரம்தானே" என்று கேட்டான்.

"ஆமா... நான் படித்து முடித்தவுடனே அப்பாவின்பிஸினஸில் சேர்ந்து விட்டேன். இப்போது சாப்பிட நேரமில்லை. பிஸி, சாயங்காலம் ஒரு வியாபார விஷயமாக ஜெர்மனி போகிறேன் வருகிறாயா?" என்று கேட்டான்.
"நீ கூட்டிக் கொண்டு போனால் தாராளமாக வருகிறேன்." என்ற தமிழரசை ஏற இறங்கப் பார்த்தான் சுந்தர்.

"என்னடா என்னிடமே கேலி பண்ண ஆரம்பிது விட்டாயா?"

"இதிலே என்னடா கேலி... நீ ஜெர்மனி போகிறேன் என்றாய். என்னையும் அழைத்தாய். என்னைக் கூட்டிக் கொண்டு போவதாக இருந்தால் வருகிறேன். இதை நீ ஏன் கேலி அல்லது கிண்டலாக நினைக்கிறாய்?"

"அரசு எப்போதும் எங்கே போனாலும்... ஏன் மூன்றுமுறை நம் நண்பர்களோடு நாம் யு.எஸ். போய் வந்த போது கூட நீதான் எல்லாப் பணமும் செலவழித்திருக்கிறாய்."

"சுந்தர், பழைய தமிழரசு பணக்காரன். ஆனால், இப்போது உன்னை நாடி வந்திருக்கும் இந்த அரசு ஒரு பைசா கூட இல்லாதவன். நான் ஏற்கெனவே உன்னிடம் சொல்லிக் கொண்டிருக்கிறேன். என் காலில் நிற்பதற்காக வெளியே வந்து விட்டேன். எப்படியாவது செய்வதற்கு உதவி செய்ய முடியுமா?"

தொடரும்...

கவிஞர் இராஜகை நிலவன்

# பூனையே உன் கண்ணை மூடு

## வாசிப்பு அனுபவம்

**நூலாசிரியர் : மா.காளிதாஸ்**
**வெளியீடு : மௌவல் பதிப்பகம்**
**பக்கம் : 74 ; நூலின் விலை : 100**




ஆசிரியர் மா.காளிதாஸ், அவர் ஒரு ஆசிரியர் பத்திற்கும் மேற்பட்ட புத்தகங்களை எழுதியுள்ளார் . இதற்கு முன் "சடவு" நூலை எனக்கு அனுப்பிவைத்திருந்தார் அதுவும் நல்ல கவிதை தொகுப்பாக இருந்தது. அடுத்ததாக இந்த புத்தகத்தை கேட்டேன் கேட்டதும் அனுப்பிவைத்தார். தமிழ்பல்லவி இதழ் நடத்திய கவிதைப்போட்டியில் ஹைக்கூ வகைமையில் இவருடைய "பூனையே உன் கண்ணை மூடு " என்ற இந்த புத்தகம் மூன்றாம் பரிசு பெற்றது அதற்கு என் வாழ்த்துகள் .

ஹைக்கூ என்பது எப்போதும் நம்மை சுற்றியுள்ளவைகளை நாம் கண்டு உணர்ந்து கொள்வது இன்னொன்று நம்மை நாம் உணர்ந்து கொள்வது ஹைக்கூ அதன் பிறப்பு ஆழ்கடலின் அமைதியை போன்றது. வெளியே சலனத்துடன் இருந்தாலும் உள்ளே சலனமற்ற ஒரு தியான நிலையையொத்தது .

ஹைக்கூவிற்குள் நுழைவோம்

கண்ணாடியை கடக்கும்
துறவி முணுமுணுக்கிறார்
இது சுக்குநூறான பிம்பம்.

உடைந்த கண்ணாடியில் சுக்குநூறான பிம்பம் எத்தனை யதார்த்தை கொணர்கிறது இந்த கவிதை.

துறவியின் மடியில் பூ விழுகிறது
சீடன் குழம்புகிறான்
வரமா? சாபமா?

கவிஞர் சு. இராஜ்குமார்

## வாசிப்பு அனுபவம்

வரத்தையும் சாபத்தையும் ஒரு பூ தீர்மானிக்குமா? வரமென்பதையும் சாபமென்பதையும் அந்த ஒரு பூ அறிந்திருக்குமா? யாருக்கு அது வரம் யாருக்கு அது சாபம் யாருக்குதான் தெரியும் தெளிந்தோருக்கு ஞானம்.

துறவியின் தாடியில்
அமர்ந்திருக்கிறது ஈ
தியானம் கலையும் வரை.

இங்கே தியானம் என்பது எது? யாருடைய தியானம் கலையும் வரை துறவியா? ஈயா? அல்லது வாசிக்கும் நாம் ஆ ? முதலில் யாருடைய தியானம் கலையும் .

வசந்தத்திலும் உதிர்கிறது
ஒரு பழுப்பிலை
புழுவை சுமந்துக்கொண்டு.

நம்மை நாம் சுமப்பதே பாரமாக நினைக்கின்ற இந்த உலகில் ஒரு பழுத்த இலை தான் உதிர்கிற நிலையிலும் ஒரு புழுவை சுமந்துக்கொண்டு உதிர்கிறதே ஆஹா என்ன ஒரு தியானத்தை கடந்த ஞானம் .. உள்ளே சென்று ஆழ்ந்து சிந்தித்தால் இங்கே புழுவும் இலையும் ஒரு குறியீடு மட்டுமே நம்மை ஒரு ஜீவன் சுமக்கிறதே அதுதான் மெய்ஞானம்.

பழைய கிராமம்
புதிய பாதையில் போய்த்
திரும்பிவிட்டது காற்று.

காற்றால் நிரம்பியது தான் உலகம் காற்றின் திசை யாரும் அறியாதது எங்கும் நிறைந்தது காற்று நம்முள்ளும் காற்று தான் நிரம்பியிருக்கின்றன.

தொடர் மழை
நனைந்த துறவி சொல்கிறார்
இன்னும் நான் நனையவே இல்லை .

ஆம் நான் எப்போது நனைந்தேன் உடல் தான் நனைந்தது மனம் இன்னும் அப்படியே தான் இருக்கிறது. ஒரு வாசகனுக்கு ஹைக்கூவை கடத்துவதும் இப்படிதான் கடத்த வேண்டும் அதை கவிஞர் மா. காளிதாஸ் சிறப்பாக செய்கிறார்.

கவிஞர் ச. இராஜ்குமார்

## வாசிப்பு அனுபவம்

அடைமழைக்குப் பின்
வானம் வெளுத்திருக்கிறது
குருவிகள் கரையான் தின்கின்றன.

ஏன் அந்த அறையில் யாருமில்லை எல்லோரும் எங்கு சென்றார்கள் அறையின் கதவு திறந்திருக்கிறதா இல்லை மூடியிருக்கிறதா மூடிய அறையாக இருந்தால் எப்படி காற்று சூழலும் நிச்சயம் அறை திறந்துதான் இருக்க வேண்டும்
யாருமற்ற அறையை முழுவதுமாக ஆக்கிரமிக்கிறது காற்று என்பது எவ்வளவு உணர்ந்துகொள்ள வேண்டிய விசயம் ..

புதர் மண்டிக் கிடக்கிறது
பயனற்ற பாதை
பறக்கிறது வண்ணத்துப்பூச்சி.

பயனற்ற பாதையென்று எதுவும் கிடையாது பயணத்தின் பாதை முடிவற்றது பாதைகள் முடிவதில்லை பயணத்தின் பாதையில் முடிவிலியில் நாம் தான் மடிந்துபோகிறோம். மலர்களை தேடும் வண்ணத்துப்பூச்சிக்கு தனித்த பாதையென்று எதுவும் கிடையாது திரும்பும் திசைகளெல்லாம் பாதைகளௌ தான் அதுபோல தேடல்கள் உள்ள மனதிற்கு பாதைகள் தேவையேயில்லை என்பது என்னுடைய கருத்தாக கருதுகிறேன்.

பதிலேதும் சொல்லாமல்
மாயமாகிறார் துறவி
அப்போதும் தொங்குகிறது புழு .

துறவி ஏன் சொல்லவேண்டும் அதற்கு புழுவின் தியானம் புழுவிற்கு யாருக்கும் யாரும் சொல்லித்தர தேவையில்லை அவர்களாகவே உணர்ந்து கொள்வார்கள் அதுவே தியானத்தின் உச்ச நிலை.

இப்படியொரு தொகுப்பை கையில் கொடுத்ததற்கு கவிஞருக்கு என் வாழ்த்துக்களும் நன்றியும் ..

கவிஞர் சு. இராஜ்குமார்

# கிறித்துவக்கம்பர் ஹென்றி ஆல்பிரட் கிருஷ்ணப்பிள்ளை

கட்டுரை

## பிறப்பு



தமிழகத்திலுள்ள திருநெல்வேலி மாவட்டத்தில் கரையிருப்பு என்னும் சிற்றூரில் 1827ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 23ஆம் நாள் பிறந்தவர் கிருஷ்ணபிள்ளை. தந்தையார் சங்கர நாராயண பிள்ளை; தாயார் தெய்வநாயகி அம்மையார்.

## படிப்பு

கிருஷ்ண பிள்ளையின் தந்தை கம்பராமாயணத்தைத் தொடர் சொற்பொழிவாக விளக்கியுரைக்கும் திறம் பெற்றவர். தம் புதல்வருக்கும் தக்க ஆசிரியர்கள் வாயிலாகத் தமிழ்ப் பயிற்சியும் வடமொழிப் பயிற்சியும் கொடுத்தார்.

## கிறித்துவராதலும் பணிசெயலும்


சாயர்புரம் திருமறைக் கல்லூரியில் தமிழாசிரியராகக் கவிஞர் பணியாற்றினார். அப்பொழுது, இயேசு பெருமானின் அறக்கருத்துகளினால் ஈர்க்கப்பெற்றுக் கிறித்துவராக மாறினார். தமது முப்பதாம் வயதில் சென்னையிலுள்ள தூய தாமசு ஆலயத்தில் திருமுழுக்குப் பெற்றார். அது முதல் ஹென்றி ஆல்பிரடு கிருஷ்ணபிள்ளை என வழங்கப்பட்டார். இவர் சென்னையில் தினவர்த்தமானி என்ற இதழின் துணையாசிரியராகவும், மாநில உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியராகவும் பணியாற்றினார். பின்னர், பாளையங்கோட்டை சி.எம்.எஸ்.கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகவும், திருவனந்தபுரம் மகாராசர் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியராகவும் பணி செய்தார். மேலும் கிறித்தவ இலக்கியச் சங்கத்தின் ஆசிரியராகவும் பணியாற்றினார்.

## படைப்புகள்

இரட்சணிய யாத்திரிகம் என்னும் காப்பியத்தை இயற்றிப் பெரும் புகழ் கொண்டவர் கிருஷ்ண பிள்ளை.

திரு அ. வில்சன், இதழாசிரியர்

## படைப்புகள்




இரட்சணிய யாத்திரிகம் என்னும் காப்பியத்தை இயற்றிப் பெரும் புகழ் கொண்டவர் கிருஷ்ண பிள்ளை. இவர் இரட்சணிய யாத்திரிகம் மட்டுமன்றி வேறு பல அரிய நூல்களையும் இயற்றியுள்ளார். இறைவனைப் புகழும் இனிய தேவாரப் பாடல்கள் அடங்கிய இரட்சணிய மனோகரம் என்னும் நூலையும், போற்றித் திரு அகவல், இரட்சணிய சரிதம் என்னும் செய்யுள் நூல்களையும் இயற்றியுள்ளார். அவ்வாறே இலக்கண சூடாமணி என்னும் இலக்கண நூல், பாளையங்கோட்டை எச்.ஏ.கிருஷ்ணபிள்ளை கிறித்துவரான வரலாறு என்ற தன் வரலாற்று நூல் ஆகியவற்றை உரைநடையில் படைத்துள்ளார்.

காவிய தரும சங்கிரகம் என்ற இலக்கியத் தொகுப்பு நூலையும் உருவாக்கியுள்ளார். வேதப்பொருள் அம்மானை, பரத கண்ட புராதனம் ஆகிய நூல்களைப் பதிப்பித்துள்ளார். இவர் எழுதியதாகக் கூறப்படும் இரட்சணிய குறள், இரட்சணிய பால போதனை ஆகிய நூல்கள் இப்போது கிடைக்கவில்லை.

## இறப்பு

தமது 73ஆம் வயதில் கி.பி. 1900ஆம் ஆண்டு, பிப்ரவரி 3ஆம் நாள் மறைந்தார்.

நன்றி
https://www.tamilvu.org/

### எழுதிய நூல்கள்

- இசுலாமிய இலக்கியச் சாரல், 2011
- நான் ஒரு தும்பி, 2004
- திருக்குறள் இன்பத்துப்பால் (மூலமும் உரையும்), 2015
- பெருங்குணத்துக் கண்ணகி, 2008
- செம்மொழித்தமிழ் அகப்பொருள் களஞ்சியம்:14 தொகுதிகள், 2016
- சிலம்பொலியார் பார்வையில் முத்தமிழ் அறிஞர் கலைஞர், 2008

### பட்டங்களும் விருதுகளும்

- சிலம்பொலி பட்டம் (1954 இல் இரா. பி. சேதுப்பிள்ளை வழங்கியது)
- பாவேந்தர் பாரதிதாசன் விருது
- சிலம்பொலியாரின் அணிந்துரைகள் எனும் நூல் தமிழ் வளர்ச்சித் துறையின் 2006 ஆம் ஆண்டிற்கான சிறந்த நூல்களில் திறனாய்வு எனும் வகைப்பாட்டில் பரிசு பெற்றிருக்கிறது.
- கம்பன் புகழ் விருது, 2013 வழங்கியது: கொழும்புக் கம்பன் கழகம், இலங்கை

### தொடர் சொற்பொழிவுகள்

செல்லப்பனின் முக்கியமான பங்களிப்பு பட்டிதொட்டியெங்கும் பழந்தமிழ் இலக்கியத்தைத் தன்னுடைய உரைகளின் வழி தூக்கிச் சுமந்தவர் என்பதாகும். பழந்தமிழ் இலக்கியத்தின் மீது காதல் உண்டாகிவிடும்படி விளக்கங்களோடும் சுவாரஸ்யமான உதாரணங்களோடும் பேசுவார். சங்க இலக்கியம், சீவக சிந்தாமணி, மணிமேகலை, சிலப்பதிகாரம், சீறாப்புராணம், தேம்பாவணி, வைணவத் தமிழ், பாவேந்தரின் பாடல்கள், காவியங்கள், நாடகங்கள், ராவண காவியம் எனத் தமிழ் இலக்கியங்களை ஆண்டுக்கணக்கில் தொடர் உரையாற்றி மங்காப் புகழ்பெற்றவர்.

### மறைவு

06 ஏப்ரல் 2019 அன்று இந்த மண்ணுலகை விட்டு மறைந்தார்

நன்றி
https://ta.wikipedia.org/wiki/
https://www.hindutamil.in/

திரு அ. வில்சன், இதழாசிரியர்

நாளை

# நமதே

பிரச்சினைகளை கண்டு பயந்து
பின் வாங்காதீர்கள்
காற்றை எதிர்த்தே
பட்டங்கள் மேலே
செல்கின்றன


அகர முதல இலக்கியப் பேரவை

அகமும் தமிழே முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு
அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு
சிவம் அறக்கட்டளை




தொடர்பிற்கு :

9597887847
8870884969


## அகர முதல இலக்கியப் பேரவை


Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com